# கும்பகோணம் அருகே ரௌடியின் சடலம் தோண்டியெடுப்பு

By DIN | Published on : 21st April 2021 07:30 AM | அ+ அ அ- | |



கும்பகோணம் அருகே புதைக்கப்பட்ட ரௌடியின் உடல், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி செவ்வாய்க்கிழமை தோண்டி எடுக்கப்பட்டு, மீண்டும் மறு கூராய்வு செய்யப்பட்டது.

கும்பகோணம் அருகே தாராசுரம் எம்ஜிஆர் காலனியை சேர்ந்தவர் சிலம்பரசன் (30). சென்னையில் மெக்கானிக்காக வேலை பார்த்து வந்த இவருக்கு திருமணமாகி இரு குழந்தைகள் உள்ளன.

காவல் துறையினரின் ரௌடி பட்டியலில் இடம்பெற்றுள்ள இவர் மீது சீர்காழி, மன்னார்குடி, கும்பகோணம் உள்ளிட்ட காவல் நிலையங்களில் கொலை, கொள்ளை வழக்குகள் உள்ளன.

இந்நிலையில், பெற்றோரைப் பார்ப்பதற்காகச் சிலம்பரசன் ஏப்ரல் 9ஆம் தேதி தாராசுரத்துக்கு வந்தார். இதையறிந்த கும்பகோணம் தாலுகா காவல் நிலையத்தினர் அவரைப் பிடிக்க முயன்றனர். அப்போது, சிலம்பரசன் தப்பித்து எம்.ஜி.ஆர். காலனியிலுள்ள குளத்துக்குள் மூழ்கி மறைந்தார். இவர் மறுநாள் (ஏப்.10) காலை குளத்தில் தலை, வாயில் ரத்தக் காயங்களுடன் இறந்து கிடந்தார்.

இதையடுத்து, சிலம்பரசனின் சடலத்தை தாலுகா காவல் நிலையத்தினர் கைப்பற்றி, கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு இவரது உடல் பரிசோதனை செய்யப்பட்டு, குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், தாராசுரம் சுடுகாட்டில்

சிலம்பரசனின் உடல் புதைக்கப்பட்டது.

இதனிடையே, சிலம்பரசனைக் காவல் துறையினர் அடித்துக் கொன்ாக அவரது உறவினர்கள் புகார் எழுப்பினர். மேலும், இவரது சாவில் சந்தேகம் இருப்பதால் மறு கூராய்வு செய்ய வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையில் மனு தாக்கல் செய்தனர்.

சிலம்பரசனின் உடலை மறு கூராய்வு செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன்படி, கும்பகோணம் வட்டாட்சியர் கண்ணன், சிபிசிஐடி துணைக் கண்காணிப்பாளர் பால்பாண்டி, தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் ராமச்சந்திரன், மதுரை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் நாகேந்திரன் உள்ளிட்டோர் முன்னிலையில் சிலம்பரசனின் உடல் செவ்வாய்க்கிழமை தோண்டி எடுக்கப்பட்டது.

இந்த உடலை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள் சரவணன், உதயபானு தலைமையிலான மருத்துவக் குழுவினர் மறு கூராய்வு செய்தனர். இந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை இருக்கும் எனக் கூறப்படுகிறது